**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 17 / 2024**
**2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ம.சா.1** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திருமதி. காளிமுத்து என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **காளீஸ்வரி** | க/பெ | **பாண்டிக்குமார்** |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவின் 1வது மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கை 2 எண்ணம், பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1
2. பாண்டிக்குமார் இறப்புச்சான்று இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.2
3. பயிர்காப்பீட்டுத் திட்ட அடங்கல் சான்று அசல் மற்றும் பட்டா இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.3
4. குடும்ப அட்டை நகல் ம.சா.ஆ.4 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

5. 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.5 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

6. 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.6 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

7. 3ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

8. 4ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.8 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

9. 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.9 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

10. 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.10 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

11. 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.11 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

12. 4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.12 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

13. ராஜா டிரேடிங்கம்பெனி சான்று அசல் ம.சா.ஆ.13

14. பாண்டிக்குமார் வாரிசு சான்று இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.14

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :–**

இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக கேள்விபட்டு நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். விபத்தை காண்பிக்கக்கூடிய மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளானோ என்றால் தாக்கல் செய்யவில்லை. மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் எனது கணவர் தான் விபத்திற்கு காரணம் என்று தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் எனது கணவரின் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது கணவர் தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் தலைக்கவசம் அணியாமலும் ஓட்டுனர் உரிமம் இல்லாமலும் பின்னால் வரும் வாகனத்தை கவனக்காமலும் கவனக்குறைவாக சென்று விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது கணவரின் ஆதார் அட்டை உள்ளது அதை நான் தாக்கல் செய்யவில்லை. அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது கணவர் விவசாயத்தின் மூலம் வருமானம் பெற்றுவந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.13 ஆவணம் ஏற்கனவே நான் வாங்கி வைத்திருந்தேன். ம.சா.ஆ.13 ஆவணம் வழங்கியவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்து நிரூபிக்க தயாராக

உள்ளேனா தயாராக உள்ளேன். ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.13 ஆவணங்கள் இழப்பீடை மிகைப்படுத்தி பெறுவதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவர் எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் இழப்பீட்டை மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை